M. Ganapathyappa Pillai. Agent.
Thirugnana Sambanda Swamigal Aathenam
Madura.
24/…

உ
சிவமயம்.

# மதுரை ஸ்ரீ மீனுட்சியம்மை வெண்பா மாலை.


மதுரை
ஸெயின்டுமேரிஸ் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்
மு. கோவிந்தசாமி ஐயரவர்களால்
இயற்றப்பெற்று



மதுரை மணிக்கைவியாபாரம் மகா-ள-ள-ஸ்ரீ
மு. சி. க. கனகசபாபதி செட்டியாரவர்கள்
பொருளுதவியால்

மதுரை
மீனலோசனி அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

1929.

உ

சிவமயம்.

# மதுரை ஸ்ரீ மீனாட்சியம்மை வெண்பா மாலை.

மதுரை

ஸெயின்டுமேரிஸ் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

மு. கோவிந்தசாமி ஐயரவர்களால்

இயற்றப்பெற்று

---

மதுரை மளிகைவியாபாரம் மகா-ள-ள-ஸ்ரீ

மு. சி. க. கனகசபாபதி செட்டியாரவர்கள்

பொருளுதவியால்

---

மதுரை

மீனலோசனி அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

1929.

# சாற்றுக்கவிகள்.

---

மதுரை தமிழ்ச்சங்க வித்துவான் மகா-ா-ா-ஸ்ரீ

## மு. ரா. அருணுசலக் கவிராயரவர்கள் பாடியது.

வெண்பா.

ஆய புகழ்மதுரை யம்பிகைமீ னுட்சியின்மேற்
றூயவெண்பா மாலையொன்று சூட்டினன்—நேயமிகு
தண்டமிழ்தேர் கோவிந்த சாமிவே தம்பயின்று
கொண்ட முதற்குலத்தார் கோ.

---

தருமபுரம் ஆதீனம் மகாவித்வசிரோமணி மகா-ா-ா-ஸ்ரீ

## வயி. நாக. ராம. அ.
## இராமநாதன் செட்டியாரவர்கள் கூறியது.

வெண்பா.

கூடலிலே வாழ்வானெங் கோவிந்த சாமிமறைப்
பாடலினன் மீனுட்சி பாதத்திற்—சூடினன்
முப்பதுமா லைப்பாவு மூசுவண்டே ருதிதனை
யொப்பதில்லை யென்ரு ளுவந்து.

---

உ

சிவமயம்.



# மதுரை ஸ்ரீ மீனாட்சியம்மை வெண்பா மாலை.

## காப்பு.

பொன்பயிலு மாடம் பொலிமதுரை மீனாட்சி
தன்பதவெண் பாமாலை சாற்றவருள்—முன்பரவும்
அத்திக் கயமுகத்தா யாண்டநெடு மான்மருகா
சித்திக் கயமுகத்தாய் செய்.

## நூல்.

பூமகளு நாமகளும் போற்றிப் பணியவருள்
மீமலியு மாமதுரை மீனாட்சி—நாமலிய
என்றுமுனைப் பாடியே னெண்ணத்தை யீந்தருள்வாய்
நின்றுமுனைப் பாடனைத்து நீத்து. (1)

காகம் கவிழ்த்தநதி கங்கைநதி யிற்சிறந்த
வேகவதி சூழ்மதுரை மீனாட்சி—சேகார்
கடப்பமரக் காட்டினாய் காத்தருள்வா யன்ன
நடப்பமரக் காட்டினாய் நன்று. (2)

சாலிவகை யன்னமலி தண்வயலி லிக்கைப்போல்
மேலிவரு மாமதுரை மீனாட்சி—கோலத்தா
கண்டலனை யாளரனார் காதலியே வேட்கையருள்
கொண்டலனை யாயே குறித்து. (3)

தோடவிழும் பூமலிந்த சோலைகளுஞ் செய்குன்ற
மேடைகளுஞ் சூழ்மதுரை மீனாட்சி—நாடுமெனைச்
செங்கமலக் கண்பார்த்தென் சிந்தனையை யீந்தருள்வா
யங்கமலக் கண்பாற வாய்ந்து. (4)

நீதிலா நற்கலைக டிக்குமுகங் கொண்டெயில்கள்
வேதனைநேர் மாமதுரை மீனாட்சி—நோதில்லா
வண்டரள மூரலசார் மாதங்கி யென்கருத்தைத்
தண்டரள மூரலம்மே தா. (5)

சாதி முறைப்படியே தான்வசிக்க மாடநிறை
வீதிகளார் மாமதுரை மீனாட்சி—சோதியுறும்
இந்தப் பராவணிவா ரேந்திழையே யெண்டருவா
யிந்தப் பராவணிய லேற்று. (6)

பொன்சாரு மாளிகைகள் பொற்புறுநற் றீபங்கள்
மின்சாரத் தார்மதுரை மீனாட்சி—மன்சாரு
கந்தரங்கத் தாறணிவான் காமாட்சி யீந்தருள்வா
யந்தரங்கத் தார்கருத்தை யாய்ந்து. (7)

கண்ணைக் கவருமெழிற் காட்சிதரு மாடங்கள்
விண்ணுக் குயர்மதுரை மீனாட்சி—எண்ணியுறு
மெந்தா பரமே யெனுமெண்ணந் தந்தருள்செய்
திந்தா பரமேயென் றீ. (8)

நாதமறை யோதிமுத்தீ நாளும் வளர்த்துவரும்
வேதியர்வாழ் மாமதுரை மீனாட்சி—காதலுடன்
தேவதனப் பாலைமறைச் சேய்க்களித்தா யென்கருத்தைச்
சேவதனப் பாலையருள் செய். (9)

செஞ்சொலுறு மாரணமுஞ் செந்தமிழ்நற் கீதமுமே
விஞ்சியுறு மாமதுரை மீனாட்சி—அஞ்சலெனச்
சேயே னினைப்பதனைச் சீராகத் தந்தருள்வா
யாயே நினைப்பணிவ தாய்ந்து. (10)

ஆகமத்தோ டாரணமா மாழியுண்டு சொன்மழைபெய்
மேகமொத்தார் வாழ்மதுரை மீனாட்சி—மோகமுற்ற
புத்திக் கருள்வாய்நீ தேன் போற்றுங் கருத்ததனைச்
சித்திக் கருள்வாய் சிறந்து. (11)

கீதவொலி கேட்டுக் கிளிக ளிசைபயிலு
மேதகுசீர் கொள்மதுரை மீனாட்சி—ஓதரிய
பஞ்சா னனத்தரனார் பைங்கிளியே யீந்தருள்வாய்
நெஞ்சா னனத்தலதை நேர். (12)

நாகமட வார்க்கு நடனமிசை கற்பிக்கு
மேகலையார் வாழ்மதுரை மீனாட்சி—யோகர்தொழப்
பொன்னம் பலனடிப்பார் பூவையே யான்வேண்ட
லின்னம் பலனடையா தென். (13)

கோனெறியிற் கோனாக் குலசேக ரன்முதலா
மீனவர்க ளாள்மதுரை மீனாட்சி—பானிறவெண்
முத்தக் கலங்களணி முக்கண்ணி வேட்கையருள்
சித்தக் கலங்கலதைத் தீர்த்து. (14)

ஆறுமறை யோர்முதலோ ராற்றுந் தருமத்தை
வேலியெனக் கொள்மதுரை மீனாட்சி—சீலமுடன்
சிந்திக்க முற்றுவந்து தேவியே யென்கருத்தை
வந்திக்க முற்றுவிப்பான் வா. (15)

சோர பயங்கொலைகள் சூழாது காத்துவரும்
வீர ருறைமதுரை மீனாட்சி—நேரும
மலையத் துவசனுயர் வாழ்வே யருணின்
நிலையத் துவசமா னேற்கு. (16)

தாயையனை மாபா தகமாதி போக்குவிக்கும்
வேயைநிகர் தோள்மதுரை மீனாட்சி—தூயகரும்
நானத் திலகநுதா னல்குவா யென்கருத்தைக்
கானத் திலகநுடங் காது. (17)

தேவரொடு நாகரிட்ட சித்திகளைப் பெற்றுவக்க
மேவிவரு மாமதுரை மீனாட்சி—பூவளர்மின்
காயத் திரிபாவுங் கல்யாணி வேட்கையருள்
வேயத் திரிபரியம் மே. (18)

அஞ்சலிசெய் தம்மே யபய மபயமென
விஞ்சையர்சேர் மாமதுரை மீனாட்சி—மஞ்சனெனக்
கந்தனைமுன் னீந்தாய் கருதெனெனக் தந்தருள்வாய்
வந்தனைமுன் னீடளித்தேன் வந்து. (19)

தாண்டியலை மோதுகடற் றாரணிவாழ் வாரெல்லாம்
வேண்டிவரு மாமதுரை மீனாட்சி—யாண்டுமுனைப்
பாடிவரு மென்கருத்தைப் பார்வதியே தந்தருள்வாய்
கோடிவரு மென்கரும்பே கூர்ந்து. (20)

ஈண்டித் தொழுபவருக் கெப்பேறே யானாலும்
வேண்டித் தருமதுரை மீனாட்சி—காண்டகவென்
உள்ளக் கருத்ததனை யோகையுட னீந்தருள்வாய்
வள்ளக் கருத்தியணி வாய். (21)

பேயைப் பெருநோயைப் பித்தைப் பிறவிதனை
வீயச் செயுமதுரை மீனாட்சி—தாயுட்
கருப்பையிலே சாராமற் காத்துநல்கு வாயென்
விருப்பையிலே சாணதென வே. (22)

தேடிவரு வோர்க்குத் தெவிட்டாத பேரின்ப
வீடுதவு மாமதுரை மீனாட்சி—கோடுடைய
தந்தா வளத்தையருள் தாயே நினைப்பருள்வாய்
சிந்தா வளத்தையருள் செய்து. (2

நத்துமன்பர்க் காறுபத்து நான்காடல் செய்வேத
வித்தகன்வாழ் மாமதுரை மீனாட்சி—பத்திசெயு
மென்னைக் கடைக்கணித்தெ னெண்ணத்தை யீந்தருள்வா
யன்னைக் கடைவிதுவே யாம். (2

என்பரவம் பூண்களிற்றோ டேய்ந்துகடம் பாடவிவாழ்
மென்பிடியே மாமதுரை மீனாட்சி—என்பிழையை
மன்னித்தென் காரியத்தை மாதாவே முற்றுவிப்பா
யுன்னித்தென் காரியத்தத் தோய். (25)

சிலமுறுந் தூய சியாமளா பீடத்தின்
மேலமரு மாமதுரை மீனாட்சி—கோலாற்
படத்தா ரணிபுரந்தாய் பார்த்தென்னை மீவாய்
வடத்தா ரணிபுயத்தாய் வந்து. (26)

துஞ்சாத மாமுனிவர் சொற்பட்ட வெள்ளானை
வெஞ்சாபந் தீர்மதுரை மீனாட்சி—நெஞ்சாரும்
வாதையற வோர்பயனை வாமியே தந்தருள்வாய்
மேதையற வோர்பணியம் மே. (27)

கொச்சைவயத் தாரிறையைக் கொண்டுசமண் கூட்டத்தை
மிச்சமறச் செய்மதுரை மீனாட்சி—மெச்சும்
இராசரா சேசுரியே யேழைகருத் தீவாய்
சராசரா தீதமுற்றாய் சார்ந்து. (28)

பூதிமணி சாதனங்கள் பூண்டுநிதம் பூசிக்கும்
மேதகையார் வாழ்மதுரை மீனாட்சி—ஓதும்
இருக்காதி யானவளே யின்றெனக்கு மீவாய்
தருக்காதி யானவில்வ தாய்ந்து. (29)

ள்ளங் கனிந்துன்னை யோதுவார்க் கின்னருளாம்
ள்ளம் பொழிமதுரை மீனாட்சி—வெள்ளறுகு
தம் பணியணிவார் மாமயிலே தந்தருள்வாய்
தம் பணிய நினைப்பு. (30)

ண்ணொடுவின் கொண்டாடு மாமதுரை மீனாட்சி
ண்ணமுற யான்றொடுத்த மாலைதனை—எண்ணிமன
ப்பியணிந் தென்கருத்தை யோகைபெறத் தந்தருள்வாய்
ப்பியவர் வாழியுறச் செய்து. (31)

மதுரை ஸ்ரீ மீனாட்சியம்மை வெண்பாமாலை முற்றிற்று.

———

சுபம்.